வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) பெரணமல்லூர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.தி.மயில்வாகனன்,

ந.க.எண்:ஊஅ4/3484/2017 நாள்:23.11.2022

பொருள் : குடியிருப்பு மனைபிரிவு– திருவண்ணாமலை மாவட்டம் – பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் – **கோழிப்புலியூர்** ஊராட்சி – சர்வே எண்:138/1ஏ2ஏ1 –ல் 0.44 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு அனுமதி அளித்து உத்திரவிடல் – சார்பு

பார்வை : 1.மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களின்
ந.க.எண்:H1WZ31WK/2023/TVM/2023/TCP
நாள்:22.08.2023
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கோப்பின் கடித நாள்:12.09.2023
3. கோழிப்புலியூர் ஊராட்சி மன்ற தீர்மான எண்:288, நாள்:10.11.2023
4. கோழிப்புலியூர் ஊராட்சி மன்ற தலைவரின் செயல்முறைகள் நாள்: 20.11.2023(23.11.2023)
5.நில பயன்பாடு மாற்ற தொகை செலுத்தப்பட்ட செலான் எண்: 20230913021254 நாள்:25.09.2023
6.கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்ட விவலம்: கோழிப்புலியூர் ஊராட்சி பல்வகை இரசீது எண்:116 நாள்:13.10.2023

****

உத்திரவு:

பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோழிப்புலியூர் ஊராட்சியில் சர்வே எண்: :138/1ஏ2ஏ1 –ல் 0.44 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மனைபிரிவுக்கு பார்வை(1)ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப இசைவு பெறப்பட்டதை தொடர்ந்தும், பார்வை (3)ல் காணும் கோழிப்புலியூர் ஊராட்சி மன்ற தீர்மானத்தின்படியும் கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

வ.எண்	ஊராட்சியின் பெயர்	மனைப்பிரிவு அமைந்துள்ள சர்வே எண்கள்	மனைப்பிரிவின் மொத்த பரப்பு	அமைக்கப்பட்டுள்ள மனைகளின் எண்ணிக்கை	மனைப்பிரிவு: ம.வ/ந.ஊ.து.இ/ வே.ம எண்:	ஊராட்சி மன்ற தீர்மான எண் மற்றும் நாள்
1	கோழிப்புலியூர்	138/1ஏ2ஏ1	0.44 ஏக்கர்	12	205/2023	288/ 10.11.2023

நிபந்தனைகள்:

- நில உரிமம் வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியபட்டாலோ அல்லது மனைபிரிவுக்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைபிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.
- விற்பனைக்கு உண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையின் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
- நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும்

உட்பிரிவு செய்தல் அகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊராட்சி நிர்வாகத்தின் அனுமதியின்றி செய்தல் கூடாது.

- அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்தில்காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் குடியிருப்பு கட்டவே பயன்படுத்த வேண்டும். இதில் கடை, பண்டக சாலை, குடியிருப்பு கட்டிடம் அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.
- பொது தேவைகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் நகர் ஊரமைப்பு துறையால் அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- மனைப்பிரிவில் அமையும் மனையில், கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சி நிர்வாகத்திடம் அனுமதி பெறப்பட வேண்டும்.
- நகர் ஊரமைப்பு துறையின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றி இருக்க வேண்டும்.

23/11/23

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி,ஊ)
பெரணமல்லூர்

BLOCK DEVELOPMENT OFFICER V .P.)
PERANAMALLUR

பெறுநர்:

திருமதி.திவ்யா,
க/பெ.சரவணன்,
எண்:2/18, மாரியம்மன் கோவில் தெரு,
கல்யாணபுரம்,
சேத்பட் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்

23/11/23

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை – தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், சேத்பட்